புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் பள்ளிக்கல்வித்துறைக்கு ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை வழங்குவோம் என்று தமிழ்நாடு ஆசிரியர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள், மாணவர்களை வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், வள்ளுவர் கோட்டத்தில் 09.10.2024 அன்று நடைபெற்றது. தி.மு. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டன உரையாற்றினார். தலைமைச் செயலக ஊழியர் சங்க தலைவர் கு.வெங்கடேசன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். ஆர்ப்பாட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சியைச் சார்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி,தி.வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கே. பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன், கே.வி.தங்க பாலு ஆகியோர் உரை நிகழ்த்தினர். இதில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க தலைவரும், அனைத்து ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளருமான கு.தியாகராஜன் உள்ளிட்ட 2500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சிப்காட் பூங்காக்களில் - தொழிற்சாலைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண

சிப்காட் தொழில் நண்பன் சந்திப்பு திட்டம்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.13-

தமிழக அரசின், சிப்காட் நிறுவன தொழிற் பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, "சிப்காட் தொழில் நண்பன் சந்திப்பு (SIPCOT BIZ BUDDY MEETING)" திட்டம் துவங்கப்பட்டு, மாதந்தோறும் இச் சந்திப்பு நடைபெற்று வருகின்றது.

காஞ்சிபுரம் மாவட்டம் , வல்லம் வடகால் தொழிற் பூங்காவில் 200க்கும் மேற்பட்ட தனியார் தொழிற்சாலைகள் இயங்கிவருகின்றன. இங்குள்ள தொழிற்சாலைகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தொழில் நண்பன் சந்திப்பு கூட்டம் வல்லம்வடகால் தொழிற் பூங்கா கூட்ட அரங்கில் 10.10.2024 (வியாழக்கிழமை) அன்று நடைபெற்றது.

வல்லம் வடகால் சிப்காட் திட்ட அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற சந்திப்பு கூட்டத்தை நா.கணேசன் , சிப்காட் தலைமை அலுவலக ஆலோசகர் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கலந்து கொண்டார்.

இதில் வல்லம் வடகால் சிப்காட்டில் செயல்படும் பதின்மூன்றுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் நிறுவனத்திற்கு தேவையான மின்சாரம் , சாலை வசதி, சொத்துவரி உள்ளிட்ட கோரிக்கைகளை தெரிவித்தனர். இதற்கு முந்தைய மாத கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டு தீர்வு காணப்பட்ட கருத்துருக்களுக்கு தொழிற்சாலை உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

வல்லம் வடகால் சிப்காட்டில் புதிதாக துணை மின் நிலையம் அமைக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை திட்ட அலுவலர் விவரித்தார். சொத்து வரி செலுத்துவது /விதிப்பது குறித்து மேல் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்தார்

மற்ற கருத்துருக்களுக்கான நடவடிக்கைகள் சிப்காட் மூலமாகவும், மற்ற பிற அரசுத் துறைகள் மூலமாகவும், தீர்வு காண எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை, திட்ட அலுவலர் எடுத்துரைத்தார். இதில் வல்லம் வடகால் திட்ட அலுவலர் திருமதி. க.காந்திமதி, உதவி பொறியாளர் ஏ. கோவிந்தசாமி மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.ந.தாட்சாயினி பங்கேற்றனர்.

இதே போன்ற தொழில் நண்பன் சந்திப்பு கூட்டங்கள் 10.10.2024 அன்று ஓரகடம், இருங்காட்டுக்கோட்டை,பிள்ளைப்பாக்கம், மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய மற்ற நான்கு சிப்காட் தொழிற் பூங்காக்களிலும் நடைபெற்றது.

திராவிடக் கொள்கைத் தூண் முரசொலி செல்வம்!

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் – இரா.அதியமான் இரங்கல்!

சென்னை, அக். 13 -

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிடச் சிந்தனை படிக்கட்டுகளில் ஒன்றான முரசொலி நாளிதழின் நிர்வாக ஆசிரியரும், நேற்று வரை கொள்கைப் பகையாளர்களுக்கு கருத்துச் சவுக்கடி தந்த எழுத்தாளரும் பத்திரிக்கையாளருமான முரசொலி செல்வம் (82) அவர்கள் மறைவுற்ற செய்தி அதிர்ச்சி அளிப்பதோடு ஆதித்தமிழர் பேரவை தனது மிகுந்த கவலையையும் தெரிவித்துக் கொள்கிறது. மறைந்த முரசொலி செல்வம் அவர்கள் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் உடன்பிறந்த சகோதரர் ஆவார்.

அதோடு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மகள் செல்வி அவர்களின் கணவரும் கூட.

மிகவும் அமைதியாக இருந்து கொண்டு தி.மு. கழக இயக்கத்தின் ஆக்கப் பணியினை செய்தவர் முரசொலி செல்வம் அவர்கள்.

திராவிடக் கொள்கை ஏடான முரசொலியில் வெளி வரும் 'சிலந்தி' என்கிற கட்டுரை பகுதியிலே கொள்கைப் பகையாளர்களுக்கு தக்க பதிலடியை சமரசமின்றி எடுத்துரைப்பவர்.

அதுமட்டுமில்லாமல் முரசொலியிலே வருகிற பெட்டிச் செய்திகள் மூலம்

அன்றாட அரசியல் நிகழ்வுகளை உலகறியச் செய்பவரென்றால் அது முரசொலி செல்வம் அவர்கள் தான். எந்தவொரு விளம்பரத் திற்கும் ஆட்படாமல் ஒரு பெரிய இயக்கத்தினுடைய அடிக்கட்டுமானமாக இருந்து செயல் பட்டவர்.

திராவிடச் சிந்தனைகளை தன் எழுத்தால் பரவச் செய்ததில் பெரும் பங்கு வகித்தவர்.

50 ஆண்டு முரசொலிக்கு மிகப் பெரும் தூணாக இருந்தவர். அரசியல் மட்டுமின்றி திரைத் துறையிலும் கால் பதித்து பல திரைப்படங்களையும் தயாரித்து இருக்கின்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதல் குழந்தையான முரசொலி யிலே நிர்வாக ஆசிரியராக பொறுப்பேற்றதிலிருந்து கொள்கைப் பகைவர்களுக்கு திராவிட சிந்தனையால் சனநாயகக் குரல் மூலம் எடுத்துரைத்த மரியாதைக்குரிய முரசொலி செல்வம் அவர்கள் மறைந்தது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும் இழப்பல்ல.

பத்திரிக்கை துறைக்கும் எழுத்துத் துறைக்கும் கொள்கைத் தூணாக இருப்பவர்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

மறைந்த முரசொலி செல்வம் அவர்களை இழந்து வாடும் கலைஞர் அவர்களது குடும்பத்தா ர்க்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும். மற்றும் சகோதரி செல்வி அவர்களுக்கும் ஆதித்தமிழர் பேரவை சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

அலுவலர் தெரிவித்தார்

மற்ற கருத்துருக்களுக்கான நடவடிக்கைகள் சிப்காட் மூலமாகவும், மற்ற பிற அரசுத் துறைகள் மூலமாகவும், தீர்வு காண எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை, திட்ட அலுவலர் எடுத்துரைத்தார். இதில் வல்லம் வடகால் திட்ட அலுவலர் திருமதி. க.காந்திமதி, உதவி பொறியாளர் ஏ. கோவிந்தசாமி மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.ந.தாட்சாயினி பங்கேற்றனர்.

இதே போன்ற தொழில் நண்பன் சந்திப்பு கூட்டங்கள் 10.10.2024 அன்று ஓரகடம், இருங்காட்டுக்கோட்டை,பிள்ளைப்பாக்கம், மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய மற்ற நான்கு சிப்காட் தொழிற் பூங்காக்களிலும் நடைபெற்றது.

தமிழோடும், கழகத்தோடும் என்றென்றும் இருப்பார்! "முரசொலி செல்வம்!"

கூற்றே! கூற்றே! கொடியவனே மாற்றுக்
குறையாக் கொள்கைத் தங்கமாக
வீற்றே கழகத் தாரிதயம் வேண்டும்
வெற்றித் தாக முழக்கத்தின்
ஊற்றை உணர்வை வளர்த்திட்ட ஈடில்
உச்சக் கருத்துப் பெட்டகத்தை
சீற்றம் கொண்டே பாவியேஎம் செல்வம்
திருடிச் சென்றாய் கொடுங்கோலனே!?

கலைஞர் தம்மின் கண்மணியைத் தளபதி
கடமைக் கருவூலப் பொருளை
தலைவி தங்கை செல்விஉயிர் கலந்த
தவத்தருள் காப்பணை யாவிளக்கை
இலைஇவர் போலொரு செயல்வீரர் என்றே
இருந்தமிழ் உலகே பாராட்டும்
நிலைபேறு செல்வத்தை இயற்கையே பொல்லா
நெடுங்கரக் கொடுங்கோலால் பிரித்தாய்!

கண்ணீர் வெள்ளம் கரைபுரள தளபதி
கருணை உள்ளம் துடிதுடிக்க
எண்ணிலாப் புண்ணியம் செய்முதல்வர்தமக்கு
இருந்தமிழ்த் தோள்துணை தந்தசெல்வம் இணையில்
திண்ணிய வலிமைசேர் திசைவெல்லும் அறிவுத்
திறம்அறம் மாட்சிச் செயற்கோவை
உண்மையின் ஒளிமகன் முரசொலி எம் 'செல்வம்'
உயிரினை இயற்கையே மீண்டும் தா!

"சிலந்தி"என்னும் திருப்பெயரால் 'முரசொலி'
'செல்வம்' செல்வம் எனக்கழக
நலம்எழுத் தாளர் வாணரெலாம் புகழ
நாயகா தமிழ்நாட் டின்தலைமை
வலம்வரும் வலைகள் பின்னிநமின் கழகம்
வாகை சூடிட வேஉழைத்த
உலகம் வியக்கும் கலைஞர்குடிப் பிறந்த
உரிமைப் போராளியே எங்குற்றாய்?

'முரசொலி' சிலந்தி கட்டுரையைப் படித்து
முதிர்ந்த கருத்தொளி தெளிவுதரும்
சிரமேற் கொண்டே பகைமைக்கும் உணர்த்தும்
தேர்ந்த படிப்பினை தனையானும்
வரமெனப் போற்றுவேன் இத்திங்கள்ஏடாம்
வந்தமுர சொலிக்கட்டுரைப் பாராட்டினேன்
உரம்பெற உடல்நலம் பேணவேண்டி யானும்
உரைத்ததும் அய்யகோ பொய்த்ததுவே!?

உறவுத் தலைமை உனதெனினும் உனக்காய்
ஒருபதவியும் பரிசுகள் தாமும்
அறம்தரு வழியிலும் கூடநீயோ விரும்பாய்
அவர்இவர் எவரும் இணையாகா

துறவியாய் வாழ்ந்தஎம் தூயவன்நீ! "செல்வம்"
துணைவிஉம் செல்வி துயர் பாராய்
இறந்தும் இரவாது) தமிழோடே என்றென்றும்
இருப்பாய் கழகம் இருக்கும்வரை!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்
உலக அமைப்பாளர் – பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் ப. பொன்னுரங்கம்
அக்டோபர் 13 (1989)

பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்க கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்.

இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளராகவும், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டம், விலைவாசிய உயர்வு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டப்பிரிவை தீயிட்டு எரித்ததால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை தெற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர்

ஆர்.சசிகுமார் தந்தை ராஜேந்திரன் மறைவு!

ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. - க.தனசேகரன் அஞ்சலி!

சென்னை, அக்.13-

கலைஞர்நகர் தெற்குப் பகுதியைச் சார்ந்த சென்னை தெற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஆர். சசிகுமார் தந்தை எம். ராஜேந்திரன் (வயது 78) நேற்று முன்தினம் (11.10.2024) பிற்பகல் 1 மணி அளவில், இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாநகராட்சி கணக்கு நிலைக்குழு தலைவர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், மாநில தொண்டரணி செயலாளர் மாஸ்டர் சேகர், தெற்கு பகுதி செயலாளர் 138வது வார்டு கவுன்சிலர் கே. கண்ணன், வடக்குப் பகுதி செயலாளர் 129 வார்டு கவுன்சிலர் முராசா, பகுதி துணை செயலாளர் அஜந்தாரவி, பெ. பாலாஜி, நிர்வாகிகள் முருகன், வழக்கறிஞர் பாலாஜி, புனிதகுமார், அருண்குமார், சபரி, வினோத், மதி, குணா, சதீஷ், மணிகண்டன், சின்னா, தீனா ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

முரசொலி செல்வம் –

உண்மையைப் பாதுகாப்பதில் துணிச்சல் மிக்கவர்!

சென்னை பத்திரிகையாளர் சங்கம் இரங்கல்!

சென்னை, அக்.12-

சென்னை பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:-

எழுத்தாளர் - மூத்த பத்திரிகையாளர் முரசொலி செல்வம் அவர்கள் 10.10.2024 அன்று காலமானார்.

முரசொலி பத்திரிகையின் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய முரசொலி செல்வம் அவர்கள், கருத்து சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் கூண்டி லேற்றி கண்டிக்கப்பட்ட பத்திரிகை ஆசிரியர்.

பத்திரிகைத் துறையில் அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பும், உண்மையைப் பாதுகாப்பதில் அவரது துணிச்சலும் என்றென்றும் நினைவு கூரப்படும்.

முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MJ) ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முரசொலியின் மூலம்

காகிதத்தை ஆயுதமாய் மாற்றிய வித்தகர் முரசொலி செல்வம்!

புதிய நீதிக் கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் இரங்கல்!

சென்னை, அக்.13 -

புதிய நீதிக்கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் விடுத்துள்ள இரங்கல் வருமாறு:-

முரசொலி செல்வம் தன் எழுத்துக்களால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வலு சேர்த்தவர். திராவிடச் சிந்தனைகளுக்கு முரசொலியின் மூலம் ஓங்கி ஒலிக்கும் குரலாய் தன் எழுத்துக்களை விதைத்தவர்.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாய் முரசொலியோடு நகமும், சதையுமாய் வாழ்ந்தவர். வீட்டைக் காட்டிலும் முரசொலியில் அதிக நாட்களை கழித்தவர்.

கட்சிப் பொறுப்புகளை ஏற்காமல் கட்சியின் வளர்ச்சிக்கு பக்கபலமாய், தக்கத் துணையாய் நின்றவர்.

காகிதத்தையே ஆயுதமாய் மாற்றும் எரிமலை எழுத்துக்களை விரல் வழியே காகிதங்களில் வடித்தவர். அவரின் பங்கு எழுத்துலகில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கலைஞர் அவர்களால் வியந்து பாராட்டும் வண்ணம் திறமை கொண்டவர். அன்பும், பண்பும், பாசமும் கொண்டு அனைவருடனும் அன்பாக பழகும் மனித நேயர். நானும் அண்ணன் செல்வமும் 40 ஆண்டு கால நண்பர்கள். நாங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்து பேசிக் கொள்வதுண்டு. அந்த நினைவுகள் நெஞ்சில் இன்னும் நிழலாடுகின்றன. எனவே நானும் ஒரு அண்ணனை இழந்த துயரத்தை அனுபவிக்கிறேன். அவரை இழந்து வாழும் அவரது துணைவியார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை புதிய நீதிக் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

எல்லோர்க்கும் இனிய பண்பாளர் எழுத்துச்சிற்பி முரசொலி செல்வம்!

அமெரிக்கா தமிழ்ப்பணிக் கழகத்தின் தலைவர் வா.மு.சே.கவிஅரசன் இரங்கல்!

நியூயார்க், அக். 13-

அமெரிக்கா தமிழ்ப் பணிக் கழகத்தின் தலைவர் வா.மு.சே.கவி அரசன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்ச் சமுதாயத்தின் ஒளி விளக்காக திகழும் தி.மு.கவிற்கும், தமிழ்நாட்டின் முதன்மை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உன்னத ஆட்சிக்கும் உறுதுணையாக இருந்தவர், பெருந்தகையாளர் அன்பிற்குரிய முரசொலி செல்வம் அவர்கள் அரசியல் மதிநுட்பத்தோடு 'சிலந்தி' என்ற புனைப் பெயரில் முரசொலியில் கட்டுரை எழுதி பகைமைகளுக்கு தெளிவு தந்த எழுத்துச்சிற்பி! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொண்டறங்களுக்கு துணை நின்ற தூயவரின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த மன வேதனை அடைந்தோம். அமெரிக்கா தமிழ்ப் பணிக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தோடு துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறுகிறோம்.

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.